Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 589/2025 PW-1**

Name : ஜெயக்குமார்
Father / Husband name : சீனுவாசன்
Village : நல்லாத்தூர்
Age : 42
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 13.02.2026

Accused present. Both side counsel present.

**<u>முதல் விசாரணை</u>**

நான் விவசாய வேலை செய்கிறேன். சாட்சி ரேவதியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 18.12.2024 அன்று மாலை 05.40 மணியளவில் நான் எனது இருச்சக்கர வாகனத்தில் பள்ளியிலிருந்து வந்த பிள்ளைகளை ஏப்பாக்கம் கூட்டுரோட்டிலிருந்து அழைத்துச்சென்றபோது ஆஜர் எதிரி எங்களுக்கு எதிரில் நடந்துவந்தார். நடந்து வந்த எதிரி அவரின் கையில் வைத்திருந்த பால்கேனால் எனது முட்டியில் இடித்துவிட்டார். நான் அதனை கேட்டபோது எதிரி பொட்ட, தேவிடியாபையா என்று அசிங்கமாகதிட்டி, பால்கேனால் என்னை தலையில் அடிக்கவந்தார், நான் ஒதுங்கிக்கொண்டேன், எதிரி மீண்டும் பால்கேனால் என்னை அடித்தபோது அந்த அடி எனது இடது உள்ளங்கையில்பட்டு இரத்தக்காயமும், தலையில் வீக்கக்காயமும் ஏற்பட்டது. வண்டியிலிருந்த எனது பிள்ளைகள் இறங்கி எனது மனைவியிடம் தகவல் சொன்னார்கள். பின்னர் எதிரியின் மனைவியும், ரேவதியும் வந்து மறித்துவிட்டார். பின்னர் ஒலக்வர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு, திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார்

வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரில் நான் நல்லாத்தூர் ஒத்தவாடை தெருவில் வசிப்பதாக சொல்லியுள்ளேனா என்றால் சம்பவ சமயத்தில் நான் நங்குணத்தில் வசித்தேன். எதிரியும் நங்குணம் கிராமத்தில் வசிக்கிறார் என்றால் சரிதான். எதிரியை பற்றி விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். புகார் கொடுத்து போலிசார் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் 22 ம் தேதி விசாரித்தார்கள். புகாரில் சம்பவம் சம்மந்தமாக யார் யாருக்கு தெரியும் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சாட்சி ரேவதி என்பவர் எதிரியின் அண்ணன் தட்சணாமூர்த்தியின் மனைவி என்றால் சரிதான். ரேவதியின் குடும்பத்திற்கும் எதிரிக்கும் தண்ணீர் இறைப்பது சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் தெரியாது. எனக்கும் எதிரிக்கும் இந்த சம்பவத்திற்கும் முன்பிருந்தே பேச்சுவார்த்தை இல்லை, புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல, எதிரிக்கும் அவரின் உடன்பிறந்தவருக்கும் இருந்த பிரச்சனையை நான் பேசிவைத்ததால் எனக்கும் எதிரிக்கும் முன்விரோதம் இருந்தது.

2. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் மண்பாதை, அதன் அகலம் என்ன என்றால் 8 - 10 அடி இருக்கலாம். சம்பவயிடத்தை சுற்றியுள்ள சரவணன் சவுக்கு நிலம், விசு, முனுசாமி காலி நிலம், வெல்கம்சிட்டி மனைப்பிரிவு ஆகியவற்றை உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரம் என்ன என்றால் 05.40 மணி இருக்கும். மேற்படி 05.40 மணி என்பதால் அங்கு ஆடு மாடுகள் மேய்ப்பவர்கள் அந்த வழியாக வருவார்கள் என்றால் அந்த வழியிலும், மெயின்ரோடு வழியாகவும் செல்வார்கள். சம்பவயிடத்திற்கும் ஒலக்கூர் காவல் நிலையத்திற்கும் சுமார் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 3 கிமீ. இருக்கும். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா, மருத்துவமனையில் கொடுத்தேனா என்றால் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு

சென்றேன். எந்த தேதியில் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால் 18.12.2024 அன்று மாலை சுமார் 7 மணியளவில் புகார் கொடுத்தேன். மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 08.15 - 08.20 மணிக்கு சென்றேன். மருத்துவமனைக்கு யார் என்னை அழைத்துச்சென்றது என்றால் நானாக சென்றேன். மருத்துவரிடம் காயம்பட்ட விவரத்தை நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். எனக்கு கையில் பட்ட காயத்திற்கு தையல் போட்டார்களா என்றால் இல்லை. இரத்தம் படிந்து ஆடையை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரி தாக்கியதாக சொல்லும் பால்கேனை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை, எதிரியின் மனைவி எடுத்துச்சென்றுவிட்டார். எனக்கு தலையில் காயம்பட்ட விவரத்தை மருத்துவரிடம் சொல்லும்போது அவர் குறித்துக்கொண்டாரா என்றால் குறித்துக்கொண்டார். சாட்சி சிவக்குமார் எனது நண்பரா என்றால் இல்லை, ஊர்க்காரர். சாட்சி சண்முகம் எனது நண்பரா என்றால் ஆமாம். நான் வழக்கறிஞராக பணி செய்கிறேன் என்றால் சரிதான். நான் இருச்சக்கர வாகனத்தில் சென்று எதிரில் நடந்து வந்த எதிரியை இடித்துவிட்டு அடித்துவிட்டிர்கள் என்றால் சரியல்ல. நான் எதிரியின் மீது இடித்து கிழே விழுந்ததால் தான் இந்தக்காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் உள்ள முன்விரோதத்தை வைத்து பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எதிரி அடிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் எதிரியின்மீது மோதிவிட்டு எதிரி புகார் கொடுப்பார் என்று பயந்து எதிரிக்கு முன்பாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.